**இலங்கை கரப்பந்தாட்ட சம்மேளனம் - 2019**

---

## 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இலங்கை கரப்பந்தாட்ட சம்மேளனத்தின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி ஐந்தொகை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமான செலவினக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்கள், பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுடன் கூடிய 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரககாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியின் குறிப்பிடப்பட்ட விடயங்களின் தாக்கங்கள் தவிர சம்மேளனத்தின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான வியாபாரங்களுக்கான இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அறிக்கை முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை சிறிய மற்றும் நடுத்தர அளவிலான வியாபாரங்களுக்கான இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, சம்மேளனத்தின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது அதிகாரசபை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் நிதியம் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

சம்மேளனத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் சம்மேளனத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வு விடயப்பரப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக சம்மேளனத்தின் கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக கொள்வதற்காகவேயன்றி சம்மேளனத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக சம்மேளனத்தின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக நிறுவகத்தின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என

நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது சம்மேளனத்தின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச் செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது சம்மேளனத்தின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க சம்மேளனம் செயற்படுகின்றதாஎனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 நிதிக்கூற்றுக்கள்

### 1.5.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்து | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நடைமுறையல்லாத சொத்துக் களுக்கான பயன்தரு ஆயுட்காலம் வருடாந்தம் மீளாய்வு செய்யப்படாததன் காரணமாக தொடர்ந்தும் பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்டு வரும் ரூபா 536,252 தொகையான தளபாடங்கள் அலுவலக உபகரணங்கள் மற்றும் விளையாட்டு உபகரணங்கள் தொடர்பாக பெறுமானத்தேய்வு செய்யப்பட்டிருந்த போதிலும், மதிப்பீட்டு வழுவை திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப் | 2020 ஆம் ஆண்டின் போது சீராக்குவதற்கு நடவடிக்கை செய்யப்பட்டுள்ளது. | முழுமையாக பெறுமானத்தேய்வு செய்யப்பட்டிருந்த உபகரணங்களின் பயன்படு ஆயுட்காலம் வருடாந்தம் மீளாய்வு செய்யப்பட வேண்டும். |

பட்டிருக்கவில்லை.

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | அலுவலக உபகரணங்கள் மற்றும் விளையாட்டு உபகரணங்களுக்காக மீளாய்வாண்டிற்காக பெறுமானத்தேய்வு ரூபா 187,699 கூடுதலாக காண்பிக்கப் பட்டிருந்ததுடன் அதன் காரணமாக மீளாய்வாண்டின் பற்றாக்குறை அப்பெறுமானத்தினால் கூடுதலாகவும் நிலையான சொத்துக்களின் தேறிய பெறுமதி அப்பெறுமானத்தினால் குறைத்தும் காண்பிக்கப்பட்டிருந்தது | 2020 ஆம் ஆண்டின் முன்னைய ஆண்டு சீராக்கமாக பதிவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் | நிலையான சொத்துக்களின கிரய பெறுமதி மற்றும் பெறுமானத்தேய்வு பெறுமதி சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (இ) | 2019 ஆம் ஆண்டில் நடாத்துவதற்கு இருந்து 2020 இல் நடாத்தப்பட்டிருந்த விளையாட்டுப் போட்டிகளுக்காக 2020 ஆம் ஆண்டின் போது செலவிடப்பட்டிருந்த ரூபா 6,875,000 தொகை மீளாய்வாண்டின் விளையாட்டுப் போட்டிச் செலவினமாகவும் அப்போட்டி களுக்காக 2020 ஆம் ஆண்டில் கிடைத்த ரூபா 3,250,000 அனுசரணை வருமானம் மீளாய்வாண்டின் வருமானமாக நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. | 2020 ஆம் ஆண்டிற்காக கிடைத்த ரூபா 3,250,000 தொகை 2019 ஆம் ஆண்டிற்காக கிடைத்த பணமாக இருப்பதால் பெறவேண்டிய அனுசரணை வருமானமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்ததுடன் அது 2020 ஆம் ஆண்டின் அனுசரணை வருமானமல்ல என தெரிவித்துக் கொள்கின்றேன். | குறித்த ஆண்டில் நடாத்தப்படும் போட்டிகளுக்கான செலவினம் மாத்திரம் அவ்வாண்டிற்குரியதாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

### 1.5.2 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டு கணக்குகள்

| விடயம் | நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் பெறுமதி | தொடர்பு டைய அறிக்கை யின் பிரகாரம் பெறுமதி | வேறுபாடு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | | |
| சுகததாச தேசிய விளையாட்டு தொகுதிக்கு செலுத்த வேண்டிய கணக்குகள் | 987,449 | 1,210,416 | 222,967 | கணக்கு கூற்றின் பிரகாரம் ரூபா 987,449 தொகை மாத்திரம் அறிக்கையிடப்பட்டுள்ளதாக அறிய தருகின்றோம். | இணங்காத மீதிகளை இனங்கண்டு சரியாக கணக்குகளில் சீராக்கம் செய்ய வேண்டும். |

### 1.5.3 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

கீழே காட்டப்பட்டுள்ள கணக்கு விடயங்களுக்குரிய முன்னால் காண்பிக்கப்பட்ட சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படாத காரணத்தினால் கணக்காய்வின் போது திருப்திகரமாக சான்றுறுதி செய்ய முடியவில்லை.

| | விடயம் | பெறுமதி | சமர்ப்பிக்கப்படாத சான்றுகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| | | **ரூபா** | | | |
| (அ) | விளையாட்டு போட்டிச் செலவினம் | 7,377,619 | செலவின விபரங்கள் அங்கீகரிக்கப்பட்ட மதிப்பீடு, பட்டியல் மற்றும் பணத்தை பெற்றுக் கொண்டமைக்கான பற்றுச்சீட்டுக்கள் | மதிப்பீட்டு மற்றும் செலவின விபரங்கள் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும். | சொத்துக்கள், வருமானம் மற்றும் செலவினங்களை உறுதிப்படுத்துவதற்கு தேவையான போதியளவும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும் |
| (ஆ) | அனுசரணை வருமானம் | 19,139,800 | அனுசரணை உடன்படிக்கை | 2020 ஆம் ஆண்டின் போது குறித்த உடன்படிக்கையை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கின்றேன். | |
| (இ) | வருமானம் | 94,000 | பற்றுச்சீட்டுக்கள் | 2020 ஆம் ஆண்டின் போது சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். | |
| (ஈ) | நானாவித சொத்துக்கள் | 16,150 | அட்டவணை | 2020 ஆம் ஆண்டின் போது மீளாய்வு செய்து சமர்ப்பிக்கின்றேன். | |

## 1.6. பெறவேண்டிய மற்றும் செலுத்தவேண்டிய கணக்குகள்

### 1.6.1 செலுத்தவேண்டிய கணக்கு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| இரண்டு அரச நிறுவனங்களுக்கு செலுத்த வேண்டிய ரூபா 2,987,449 தொகை 05 ஆண்டு காலமாகவும் ரூபா 5,000 அட்டுறு செலவின மீதிகள் 3 ஆண்டு காலமாக தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இணங்குகின்றேன். | செலுத்த வேண்டிய பணத்தை தாமதமின்றி தீர்வு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவுகள் ரூபா 8,060,258 ஆன பற்றாக்குறையொன்றாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான பற்றாக்குறை ரூபா 3,332,963 ஆக இருந்தது. அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 4,727,295 ஆன வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. செயற்பாட்டு வருமானம் ரூபா 26,801,251 ஆல் குறைவடைந்தமை பிரதான காரணமாக இருந்தன.

## 3. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 3.1 செயல் நடவடிக்கைத் திட்டம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2016 இன் 01 ஆம் இலக்க தேசிய விளையாட்டு சங்கத்தின் 7(xii) ஆம் இலக்க கட்டளையின் பிரகாரம் மீளாய்வாண்டிற்காக வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப் பட்டிருக்கவில்லை. | இணங்குகின்றேன் | தேசிய விளையாட்டு சங்கத்தின் கட்டளைகளின் பிரகாரம் வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்ட மொன்று தயாரிக்கப்பட வேண்டும். |

### 3.2 உள்ளக கணக்காய்வு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டின் சம்மேளனத்தின் ரூபா 62.2 மில்லியன் வருமானம் மற்றும் ரூபா 70.3 மில்லியன் செலவினம் ஒன்று காணப்பட்டதுடன் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த சொத்துக்கள் கூட்டுத்தொகை ரூபா 5.5 மில்லியனாக இருந்தது. எவ்வாறாயினும் சம்மேளனத்தின் செயற்பாடுகள் தொடர்பாக உள்ளக கணக்காய்வொன்று மேற்கொள்வது தொடர்பில் நிர்வாக சபையின் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. | இணங்குகின்றேன் | சம்மேளனத்தின் கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக உள்ளக கணக்காய்வொன்று மேற்கொள்ளப்பட வேண்டும். |